Puducherry / Regional Bulletin / Tamil / 18.10hrs / 24.5.2024/ Script

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

தேதி : 24.5.2024 - வெள்ளிக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

6 மாநிலங்கள், மற்றும், 2 யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 58 தொகுதிகளில் நாளை நடைபெற உள்ள ஆறாம் கட்ட மக்களவைத் தேர்தல் வாக்குப் பதிவிற்கான எல்லா ஏற்பாடுகளும், செய்து முடிக்கப் பட்டுள்ளன.

கடந்த 10 ஆண்டுகளில், நாட்டின் எல்லைப் பகுதிகளில் விரிவான வளர்ச்சி உருவாகி இருப்பதாக, பிரதமரும், மூத்த பிஜேபி தலைவருமான திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இந்தியா அடுத்த 10 ஆண்டுகளில், 10 ட்ரில்லியன் டாலர் பொருளாதாரமாக நாடு மேம்படும் என்று தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல் கூறியுள்ளார்.

வங்கக் கடலில் நிலவும் காற்றழுத்த தாழ்வு மண்டலம், நாளை புயலாகவும், வலுப்பெற்று, அதன் பின்னர் தீவிரப் புயலாகவும் வலுப்பெறக் கூடும் என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

***ஆறாம் கட்டம் (14)***

6 மாநிலங்கள், மற்றும், 2 யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 58 தொகுதிகளில் நாளை நடைபெற உள்ள ஆறாம் கட்ட மக்களவைத் தேர்தல் வாக்குப் பதிவிற்கான எல்லா ஏற்பாடுகளும், செய்து முடிக்கப் பட்டுள்ளன. தேர்தலை சுமுகமாகவும், அமைதியாகவும் நடத்த தேர்தல் ஆணையம் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. நாளை தேர்தல் நடைபெற உள்ள தொகுதிகளில், உத்தரப்பிரதேசத்தில் 14 தொகுதிகளும், ஹரியானாவில் 10, பீகார் மற்றும் மேற்கு வங்கத்தில் தலா 8, டெல்லியில் 7, ஒடிசாவில் 6, மற்றும், ஜார்கண்ட்டில் 4 தொகுதிகளும், ஜம்மு – காஷ்மீரின் 1 தொகுதியும் அடங்கும். நாளைய ஆறாம் கட்ட மக்களவைத் தேர்தலில், திரு. தர்மேந்திர பிரதான், திரு. மனோகர் லால் கட்டார், திருமதி. மேனகா காந்தி உள்ளிட்ட மூத்த பிஜேபி தலைவர்களும், திரு. ராஜ் பப்பர், திரு. தீபேந்தர் சிங் ஹுடா உள்ளிட்ட மூத்த காங்கிரஸ் தலைவர்கள், மற்றும், திரு. தர்மேந்திர யாதவ் உள்ளிட்ட மூத்த

சமாஜ்வாதி தலைவர்களும், முக்கிய வேட்பாளர்களாக, போட்டி களத்தில் உள்ளனர்.

***பிரச்சாரம் -1 (16)***

இதற்கிடையே, 8 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 57 தொகுதிகளில், ஜுன் 1-ஆம் தேதி நடைபெற உள்ள, ஏழாவது மற்றும் இறுதி கட்ட மக்களவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமாக நடைபெற்று வருகிறது. பிரதமரும், மூத்த பிஜேபி தலைவருமான திரு. நரேந்திர மோடி இன்று ஹிமாச்சல் மாநிலம் சிம்லாவில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்.

மத்திய அரசு கடந்த 10 ஆண்டுகளில், நாட்டின் எல்லைப் பகுதிகள் மற்றும் மலைப் பிரதேச மாநிலங்களில், சாலை வசதி உள்ளிட்ட பல்வேறு துறைகளில், விரிவான வளர்ச்சி ஏற்படுத்தி இருப்பதாக, திரு. நரேந்திர மோடி கூறினார். இந்திய ராணுவம் கடந்த 10 ஆண்டுகளில், மிகவும் வலுவடைந்து இருப்பதாகவும், தற்போது எதிரி நாடுகளை அவர்களின் எல்லைக்குள் வைத்தே தாக்கும் திறன், இந்திய ராணுவத்திற்கு இருப்பதாகவும் கூறினார். ராணுவத்தினரின், ஒரே பதவி – ஒரே ஓய்வூதிய கோரிக்கையை நிறைவேற்றியதும் நடப்பு அரசுதான் என்று அவர் தெரிவித்தார்.

நாட்டில், தற்போதுள்ள இட ஒதுக்கீட்டுப் பிரிவுகளை நீக்கிவிட்டு, மத முன்னுரிமை அடிப்படையில் இட ஒதுக்கீடு வழங்க, காங்கிரஸ் விரும்புவதாக, திரு. நரேந்திர மோடி குற்றம் சாட்டினார். இந்த எண்ணம்

*பிரச்சாரம் -2 (16)*

நிறைவேறுவதை பிஜேபி ஒருபோதும் அனுமதிக்காது என்றும் அவர் தெரிவித்தார். தொடர்ந்து, ஹிமாச்சல் மாநிலம் மண்டி தொகுதியிலும், பிரதமர் திரு. நரேந்திர மோடி தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்.

காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவில், நாட்டிற்கே உணவளிக்கும் விவசாயிகளுக்கு, காங்கிரஸ் எப்போதுமே முன்னரிமை அளிப்பதாக கூறியுள்ளார். பசுமைப் புரட்சி மற்றும் வெண்மைப் புரட்சிக்கு காங்கிரஸ்தான் காரணம் என்றும், 16 ஆண்டுகளுக்கு முன்பு, மத்தியில் அப்போது இருந்த காங்கிரஸ் கூட்டணி அரசுதான், 72 ஆயிரம் கோடி ரூபாய் விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார். காங்கிரஸ் மீண்டும் ஆட்சிக்கு வந்தால், 15 கோடி விவசாய குடும்பங்கள் பயன்பெறும் வகையில், 5 உத்தரவாதங்கள் உறுதி செய்யப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

காங்கிரஸ் பொதுச் செயலர் திரு. சச்சின் பைலட் இன்று பஞ்சாப் மாநிலம் அனந்தபூர் சாகிப் தொகுதியில், தேர்தல் பிரச்சாரப் பேரணியில் பேசுகையில் மத்தியில் உள்ள பிஜேபி அரசு அரசியல் சாசன அமைப்புகளை பலவீனப் படுத்தி விட்டதாகக் குற்றம் சாட்டினார். பெரும்

***பிரச்சாரம் -3(5)***

தொழில் அதிபர்களுக்கு ஆதரவாகவே, அரசு செயல்படுவதால், சாதாரண மக்கள் இன்னும் ஏழை ஆகிவிட்டதாக அவர் தெரிவித்தார்.

தேர்தல் நடைபெற உள்ள தொகுதிகளில், பகுஜன் சமாஜ், ராஷ்ட்ரிய ஜனதாதளம் மற்றும் இடது சாரி கட்சிகளும், தத்தம் வேட்பாளர்களுக்கு ஆதரவாக தீவிரப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

***கோதுமை (15)***

பஞ்சாப், அரியானா, உத்தரப்பிரதேசம், மத்திய பிரதேசம் உட்பட நாட்டின் முக்கிய கோதுமை சாகுபடி மாநிலங்களில், நடப்பு ஆண்டு ராபி பருவத்திற்கான கோதுமை கொள்முதல் பணிகள் சுமுகமான முறையில் நடைபெற்று வருவதாகவும், இதுவரை 262 லட்சம் டன் கோதுமை கொள்முதல் செய்யப் பட்டுள்ளதாகவும், மத்திய அரசு தெரிவித்துள்ளது. இது கடந்த ஆண்டின் மொத்த கொள்முதலை காட்டிலும் சுமார் 2 லட்சம்

டன் அதிகம் என்று, மத்திய உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. கோதுமை கொள்முதல் பணிகளால் 22.31 லட்சம் விவசாயிகள் பயன் பெற்றுள்ளதாகவும், குறைந்த பட்ச ஆதரவு விலையாக மொத்தம் 59 ஆயிரத்து 715 கோடி ரூபாய் இவர்களுக்கு வழங்கப் பட்டுள்ளதாகவும், அமைச்சகம் கூறியுள்ளது. இதற்கிடையே நெல் கொள்முதல் பணிகளும், சுமுகமாக நடைபெற்று வருகின்றன. இதுவரை, 98.26 லட்சம் விவசாயிகளிடம் இருந்து, மொத்தம் சுமார் 728 லட்சம் கோடி டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு, 1 லட்சத்து 60 ஆயிரம் கோடி ரூபாய் குறைந்தபட்ச ஆதரவு விலை, விவசாயிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது.

***அணி வகுப்பு (7)***

புனேயில் உள்ள தேசிய பாதுகாப்பு அகாடமியில் 146-ஆவது தொகுப்பாக மூன்றாண்டுப் பயிற்சி முடித்த படைப் பிரிவினரின் அணி வகுப்பை ராணுவத் தளபதி ஜெனரல் மனோஜ் பாண்டே இன்று பார்வையிட்டார். கடற்படை மற்றும் விமானப் படையைச் சேர்ந்த 132 பேர் பி.டெக் பயிற்சி முடித்துள்ள நிலையில், கண்ணூர் எழிமலை கடற்படை பயிற்சி நிறுவனம், மற்றும், ஐதராபாத் விமானப்படை பயிற்சி

நிறுவனத்தில், இவர்கள் மேலும் ஓராண்டு சிறப்புப் பயிற்சிப் பெற இருப்பதும் குறிப்பிடத் தக்கது.

***அஜித் தோவல்-1 (17)***

இந்தியா வேகமாக மாறி வருவதாகவும், அடுத்த 10 ஆண்டுகளில், 10 ட்ரில்லியன் டாலர் பொருளாதாரமாக நாடு மேம்படும் என்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல் கூறியுள்ளார். எல்லைப் பாதுகாப்புப் படை சார்பில் இன்று புதுடெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ருஸ்தம்ஜி நினைவு சொற்பொழிவு ஆற்றுகையில், அவர் இவ்வாறு கூறினார். உலகின் 3ஆவது மிகப் பெரிய பொருளாதாரமாக இந்தியா மேம்படும் என்றும், உலகின் மிகப் பெரிய உழைப்பாளர் சக்தியாக நாடு திகழும் என்றும் அவர் தெரிவித்தார். செயற்கை நுண்ணறிவு, செமி கண்டக்டர், உற்பத்தி, பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில், தொழில்நுட்ப ரீதியில் முன்னேறிய நாடாக இந்தியா இருக்கும் என்றும் அவர் கூறினார்.

எல்லைகளைப் பாதுகாப்பதில், எல்லைப் பாதுகாப்புப் படையினர் ஆற்றி வரும் சிறப்பான பணிகளையும், திரு. அஜித் தோவல் பாராட்டினார். எல்லைப் பாதுகாப்புப் படையின் தலைமை இயக்குநர்

திரு. நிதின் அகர்வால் இந்நிகழ்ச்சியில் பேசுகையில், எல்லைப் பகுதிகளில் பாதுகாப்புப் படைகளுக்கு அப்பாற்பட்டு, மருத்துவ சிகிச்சை முகாம்கள் மற்றும் விளையாட்டுப் போட்டிகளையும் தாங்கள் நடத்தி வருவதாக தெரிவித்தார்.

***அஜித் தோவல் -2 (4)***

இதனால், எல்லைப் பாதுகாப்புப் படையினர் மீதான, உள்ளூர் மக்களின் நம்பிக்கை மேம்படும் என்று கூறினார். மத்திய உள்துறை செயலர் திரு. ஏ.கே. பல்லா, புலனாய்வு பிரிவு இயக்குநர் திரு. தப்பன் தேக்கா உள்ளிட்டவர்களும், நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

***கலைவிழா (12)***

வளர்ச்சி அடைந்த நாடாக மேம்படுவதற்கான இந்தியாவின் பயணத்தில், கலை – கலாச்சாரத்திற்கு, முக்கிய இடம் இருக்கும் என்று, மத்திய கலாச்சாரத் துறைச் செயலர் திரு. கோவிந்த மோகன் கூறியுள்ளார். புதுடெல்லியில், சமாகம் கலைவிழா என்னும் 4 நாள் விழாவை அவர் தொடக்கி வைத்துப் பேசுகையில், சமுதாயத்தில் கலைகளுக்கு முக்கிய இடம் இருப்பதை சுட்டிக்காட்டி, கலைகளைப் போற்றி வளர்க்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். தற்போது ஸ்டார்ட் அப் நிறுவனங்களும், கலை-கலாச்சாரத் துறையில் ஈடுபட்டு வருவதை

திரு. கோவிந்த மோகன் பாராட்டினார். நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த புகழ்பெற்ற ஓவியர்கள் மற்றும் வளரும் கலைஞர்களின் ஓவியங்கள் அடங்கிய கண்காட்சியும், கருத்தரங்கம், பயிலரங்கம் போன்ற பல்வேறு நிகழ்வுகளும், சமாகம் கலைவிழாவில் இடம் பெற்றுள்ளது.

***டுக்கம் (5)***

ஆஸ்திரேலியாவிற்கு வடக்கே, தென்பசிபிக் கடலில் அமைந்துள்ள தீவு நாடான பப்புவா நியூ கினியாவில், தொலைதூரப் பகுதி ஒன்றில், இன்று நிகழ்ந்த நிலச்சரிவில், சுமார் 100 பேர் உயிரிழந்தனர். இன்னும் பலர் இடிபாடுகளில் சிக்கி இருப்பதால், பலியானோர் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

***வானிலை -1 (16)***

வங்கக் கடலில் நேற்று நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடைந்து, இன்று காலை, மத்திய வங்கக் கடல் பகுதியில் நிலவியது. இது வடகிழக்கு திசையில் மேலும் நகர்ந்து, புயலாக வலுப்பெற்று, நாளை 25ஆம் தேதி காலை வாக்கில், மத்திய கிழக்கு வங்கக் கடல் பகுதிகளில் நிலவக்கூடும் என்றும், அதன் பின்னர் வடக்கு திசையில் நகர்ந்து, தீவிரப்புயலாக வலுப்பெற்று, வரும்

26ஆம் தேதி நள்ளிரவு வாக்கில், வங்கதேசம் மற்றும் அதனை ஒட்டிய, மேற்கு வங்காள கடற்கரையை கடக்கக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது அல்லாது தெற்கு கேரளா மற்றும் அதனை ஒட்டியுள்ள பகுதிகளில் வளிமண்டல மேலடுக்குச் சுழற்சியும் காணப்படுகிறது. இதன் காரணமாக தமிழகத்திலும், புதுச்சேரி - காரைக்கால் பகுதிகளிலும் வரும் 30ஆம் தேதி வரை லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப் படுகிறது. இன்றைய தினம், நீலகிரி, கோயம்புத்தூர் மாவட்ட மலைப்பகுதிகள், தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், நெல்லை குமரி உள்ளிட்ட ஓரிரு இடங்களில், கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

***வானிலை -2 (10)***

தூத்துக்குடி, நாகை, பாம்பன், எண்ணூர் மற்றும் கடலூர் துறைமுகங்களில், 1ஆம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப் பட்டுள்ளது. குமரிக்கடல், மன்னார் வளைகுடா, மற்றும் தென்தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில், பலத்த சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்பதால், மீனவர்கள் வரும் 28ஆம் தேதி வரை கடலுக்குள் செல்ல வேண்டாம்

என்றும், ஏற்கனவே ஆழ்கடலுக்கு சென்றுள்ள மீனவர்கள் உடனடியாக கரை திரும்ப வேண்டும் என்றும் அறிவுறுத்தப் பட்டுள்ளது.

இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக, நெல்லை மாவட்டம் நாலுமுக்கில் 10 செ.மீட்டரும், குமரி மாவட்டம் பேச்சிப்பாறை உள்ளிட்ட இடங்களில் தலா 8 செ.மீட்டரும் மழை பதிவாகி உள்ளது.

***ஆலோசனை (6)***

தமிழகத்தில், மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து, தலைமைச் செயலர் திரு. சிவதாஸ் மீனா, இன்று சென்னையில் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார். தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தின்போது, மழைக்காலத்தில் மருத்துவத் திட்டங்களை செயல்படுத்துவது குறித்தும், மருத்துவ மனைகளின் தயார்நிலை மற்றும் பேரிடர் நிலவரங்களை எதிர்கொள்வது குறித்தும், ஆலோசிக்கப் பட்டது.

***ஐபிஎல் (6)***

ஐபிஎல் ப்ளே-ஆஃப் சுற்றில் இன்று இரவு 7.30 மணிக்கு சென்னை, சேப்பாக்கம் எம்.ஏ. சிதம்பரம் மைதானத்தில் நடைபெறும் 2 ஆவது குவாலிபையர் போட்டியில், ஐதராபாத் – ராஜஸ்தான் அணிகள் மோத உள்ளன. இன்றைய போட்டியில், வெற்றி பெறும் அணி வரும் ஞாயிற்றுக்கிழமை சென்னையில் நடைபெற உள்ள இறுதிப் போட்டியில், கொல்கத்தா அணியை எதிர்கொள்ளும்.

***வில் வித்தை (6)***

தென்கொரியாவில் நடைபெறும் உலகக் கோப்பைக்கான இரண்டாம் கட்ட வில்வித்தை போட்டிகளின் இறுதிப் போட்டிக்கு, ஜோதி வென்னம், பிரியான்ஷ் ஆகியோர் அடங்கிய கூட்டுக் கலப்பு அணி தகுதி பெற்றுள்ளது. நாளை நடைபெற உள்ள இறுதிப் போட்டியில், இவர்கள் அமெரிக்க அணியை சந்திக்க உள்ளனர். இப்போட்டித் தொடரின் தனிநபர் பிரிவிலும், இந்திய வீரர் பிரதமேஷ், அரையிறுதி நிலைக்கு முன்னேறி உள்ளார்.

*சிந்து (5)*

கோலாலம்பூரில் நடைபெறும் **மலேசியா மாஸ்டர்ஸ்** பேட்மிண்டன் **மகளிர் ஒற்றையர்** அரையிறுதிப் போட்டிக்கு, இந்தியாவின் பி.வி. சிந்து தகுதி பெற்றுள்ளார். காலிறுதிப் போட்டியில், சீன வீராங்கனையைத் தோற்கடித்து, அவர் அரையிறுதிக்கு முன்னேறினார். நாளை நடைபெற உள்ள அரையிறுதிப் போட்டியில், பி.வி.சிந்து, தாய்லாந்து வீராங்கனையுடன் மோதுவார்.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

6 மாநிலங்கள், மற்றும், 2 யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 58 தொகுதிகளில் நாளை நடைபெற உள்ள ஆறாம் கட்ட மக்களவைத் தேர்தல் வாக்குப் பதிவிற்கான எல்லா ஏற்பாடுகளும், செய்து முடிக்கப் பட்டுள்ளன.

கடந்த 10 ஆண்டுகளில், நாட்டின் எல்லைப் பகுதிகளில் விரிவான வளர்ச்சி உருவாகி இருப்பதாக, பிரதமரும், மூத்த பிஜேபி தலைவருமான திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இந்தியா அடுத்த 10 ஆண்டுகளில், 10 ட்ரில்லியன் டாலர் பொருளாதாரமாக நாடு மேம்படும் என்று தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித் தோவல் கூறியுள்ளார்.

வங்கக் கடலில் நிலவும் காற்றழுத்த தாழ்வு மண்டலம், நாளை புயலாகவும், வலுப்பெற்று, அதன் பின்னர் தீவிரப் புயலாகவும் வலுப்பெறக் கூடும் என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.